


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## பிப்ரவரி - 2020

We Are Here..!! To Guide You..!!



# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## பிப்ரவரி - 27.02.2020

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**WeShine Study Circle**

Plot No: 47/60, “AK” Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- அறிவியல் நிகழ்வுகள்







# தேசிய நிகழ்வுகள்

- **வாடகைத்தாய் (ஒழுங்குமுறை) மசோதா, 2019இல் அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.**
    - இந்த மாற்றங்களை மாநிலங்களவையின் 23 பேர் கொண்ட தேர்வு குழு அறிமுகப்படுத்தியது.
    - **செய்தி துளிகள்:**
        - இதன் மூலம் **ஒரு பெண் ஒரு முறை மட்டுமே வாடகைத்தாயாக இருக்க இயலும்.** மேலும் அவருக்கு திருமணமாகி ஒரு குழந்தை இருக்க வேண்டும். **வயது 25 முதல் 35** ஆக இருக்க வேண்டும்.
        - வணிக ரீதியான வாடகைத்தாய் முறையை தடுப்பதே இதன் நோக்கமாகும்.

- **கிழக்கு காமெங் மாவட்டத்தில் உள்ள பக்கே புலிகள் காப்பகம் (Pakke Tiger Reserve – PTR) வழியாக நெடுஞ்சாலை ஒன்றை அமைக்க அருணாச்சலப் பிரதேச மாநில அரசு திட்டமிட்டுள்ளது.**
    - இந்தப் புலிகள் காப்பகம் தனது இருவாய்ச்சி கூடுகளை ஏற்றுக் கொள்ளுதல் திட்டத்திற்காக **'அச்சுறுத்தல் நிலையில் உள்ள உயிரினங்களின் பாதுகாப்பு'** என்ற பிரிவில் 2016ஆம் ஆண்டின் இந்தியா பல்லுயிர் விருதினை வென்றுள்ளது.
    - **செய்திதுளிகள்:**

- **பக்கே புலிகள் காப்பகம் பாகுய் புலிகள் காப்பகம்** என்றும் அழைக்கப்படுகின்றது.

- **சாம்ராஜ்நகர் மாவட்டத்தில் உள்ள மலை மகாதேஷ்வர் வனவிலங்குச் சரணாலயத்தைப் புலிகள் காப்பகமாக அறிவிக்க கர்நாடக மாநில அரசு முன்மொழிந்துள்ளது.**
    - கர்நாடகாவில் : இது அறிவிக்கப்பட்டால், சாம்ராஜ்நகர் மாவட்டமானது நாட்டில் மூன்று புலிகள் காப்பகத்தை கொண்டுள்ள ஒரு தனித்துவமான புகழைப் பெற இருக்கின்றது.
    - இது ஏற்கனவே பந்திப்பூர் புலிகள் காப்பகம் மற்றும் பிலிகிரி ரங்கநாதர் கோயில் (Biligiri Ranganatha Temple – BRT) புலிகள் காப்பகம் ஆகியவற்றை தனது வரம்பு எல்லைக்குள் கொண்டுள்ளது.
    - **செய்திதுளிகள்:**
        - மேலும், இதன் மூலம், **கர்நாடகா மாநிலமானது இவை இரண்டைத் தவிர நாகர்ஹோல், பத்ரா மற்றும் அன்ஷி – தண்டேலி என்று ஆறு புலிகள் காப்பகத்தைக் கொண்டிருக்கும்.**

- இந்திய உச்ச நீதிமன்றமானது சிறுத்தை மீள் அறிமுகத் திட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.
    - தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையமானது இதனை மத்தியப் பிரதேசத்தில் உள்ள குனோ – பால்பூர்



We Shine Academy™

வனவிலங்குச் சரணாலயத்தில் மீள் அறிமுகம் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

- **இந்தியாவில் அழிந்து போன ஒரே ஒரு முக்கிய இனம் சிறுத்தை மட்டுமே ஆகும்.**
- **செய்தித்துளிகள்:**
    - IUCNன் (இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியம் - International Union for Conservation of Nature) **சிவப்புப் பட்டியலானது "சிறுத்தையை""பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய இனம்"** என்று வகைப்படுத்தியுள்ளது.
- இந்தியாவின் **கடைசி சிறுத்தை 1947ஆம் ஆண்டில் சத்தீஸ்கரில் கொல்லப்பட்டது.**

## சர்வதேச நிகழ்வுகள்

- **இந்திய விமானப்படைக்கும் இங்கிலாந்தின் ராயல் விமானப்படை இணைந்து நடத்தும் கூட்டு பயிற்சி இந்திர – தனுஷ்** கூட்டு ராணுவ பயிற்சியான 2020-இன் 5-வது பதிப்பு உத்திரபிரதேசத்தில் இருக்கும் ஹின்டன் விமானப்படை நிலையத்தில் நடைபெற்றது.
    - **ஹின்டன் விமானப்படை மேற்கு விமான படையின் கீழ் இயங்குகிறது**. இது உலகின் எட்டாவது மிகப்பெரிய (ம) ஆசியாவின் மிகப்பெரிய விமான தளமாகும்.

# அறிவியல் நிகழ்வுகள்

- **புவி கண்காணிப்புக்கு உதவும் ஜிஜசாட் - 1 செயற்கைகோளை இந்திய விண்வெளி ஆய்வு மையம்** (இஸ்ரோ) வரும் மார்ச் 5-ஆம் தேதி விண்ணில் செலுத்த உள்ளது.
  - இந்த **செயற்கைகோள் 2268 கிலோ எடை** கொண்ட முழுவதும் உள்நாட்டில் உருவாக்கப்பட்டுள்ள இந்த அதிநவீன கேமிராக்கள் மூலம் புவியை படம் பிடித்து அனுப்பக்கூடிய இந்த செயற்கைகோள், இஸ்ரோ சார்பில் அனுப்பப்படும் முதல் அதிவிரைவு செயற்கைகோள் என்பது குறிப்பிடத்தக்கது.
  - **செய்திதுளிகள்:**
    - இது ஸ்ரீஹரிகோட்டாவில் அமைந்துள்ள ISRO – வின் 2வது ஏவுதளத்திலிருந்து செலுத்தப்பட உள்ளது.
    - இது **ISRO – வின் சார்பில் விண்ணில் ஏவப்படும் 14 வது ஜி.எஸ்.எல்.வி ராக்கெட்** ஆகும்.

We Shine Academy TM

# திருக்குறள்

**குறள் : 121**
குறள் பால் : அறத்துப்பால்
குறள் இயல் : இல்லறவியல்
குறள் அதிகாரம் : நடுவு நிலைமை

**அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**
**ஆரிருள் உய்த்து விடும்.**

**விளக்கம் :** அடக்கம் அழியாத புகழைக் கொடுக்கும் அடங்காமை வாழ்வையே இருளாக்கி விடும்.

We Shine Academy™